**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காட்டுமன்னார்கோயில்**

முன்னிலை திரு. M. சாம் யூஜின் ஜெபக்குமார், B.E.,B.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் ,
காட்டுமன்னார்கோயில்

**2026–ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30 ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**சுருக்கு விசாரணை வழக்கு எண். 257/2015**

**(CNR NO: TNCD 190002332015**

M.R.சிவசுப்பிரமணியன்
த/பெ.ராமலிங்கம் ... புகார்தாரர்

// எதிர் //

மாமன்னன்
த/பெ. ஆறுமுகம் ... எதிரி

(Amended as per order passed in
C.M.P. 2655/2016, dated 08.08.2016)

இவ்வழக்கானது 01.06.2026 அன்று விசாரணைக்கு வந்தபொழுது புகார்தாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சௌந்தர்ராஜன் அவர்கள் ஆஜராகியும், எதிரிக்காக வட்ட சட்ட பணிகள் ஆணையத்தால் நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் திரு.K.முருகன் M.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், சாட்சி, சான்றாவணங்களை

பரிசீலனை செய்தும், இந்த வழக்கில் இந்நீதிமன்றம் இன்று வழங்கும்,

## /தீர்ப்புரை/

இவ்வழக்கானது புகார்தாரரால் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138—ன் கீழ் எதிரி குற்றமிழைத்ததாகவும், தக்க தண்டனை வழங்கிட கோரி கு.வி.மு.ச.பிரிவு 200 கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. புகாரின் சுருக்கம்:**

புகார்தாரர் காட்டுமன்னார்கோயில், உடையார்குடி, சிதம்பரம் மெயின்ரோட்டில் TVS கம்பெனியின் ஏஜெண்டாக 2006ல் இருந்து show room வைத்து TVS கம்பெனியில் அனைத்து ரக இரு சக்கர வண்டிகள் விற்பனை செய்து வந்துள்ளார் என்றும், அந்த கம்பெனியின் உதிரி பாகங்களையும் விற்பனை செய்து வந்தார் என்றும், பின்னிட்டு 2012 ஜுன், ஜுலை வாக்கில் அந்த தொழில் அவருக்கு திருப்திகரமாக இல்லாததால் அதனை நிறுத்திக் கொள்வதற்கு முடிவு செய்து அதன் பிரகாரம் அந்த தொழிலையும் நிறுத்தி விட்டார் என்றும், அது சமயம் மேற்படி நிறுவனத்தின் மேற்படி உதிரி பாகங்கள் விற்பனையாகாமல் இருந்தது என்றும், அதனை எதிரி ஜெயங்கொண்டத்தில் உதிரி பாக விற்பனை மற்றும் இருசக்கர வேலை தொழிலில் ஈடுபட்டதால் அவர் புகார்தாரர் வசம் உள்ள உதிரி பாகங்களை கடனுக்கு வாங்க முன்வந்தார் என்றும், புகார்தாரரும் இவற்றை வேறு விதத்தில் விற்பனை செய்யமுடியாத காரணத்தால் 05.05.2012ந் தேதி

ரூ.1,01,000/– மதிப்புள்ள உதிரி பாகங்களை கடனுக்கு கொடுத்தார் என்றும், அதன் தொகையை ஒரு மாத காலத்திற்குள் செலுத்திவிடுவதாக உறுதிக் கூறி இந்த எதிரி மேற்படி பொருட்களை பெற்றுக் கொண்டுள்ளார் என்றும், ஆனால் அவர் கூறியபடி ஒரு மாத காலத்திற்குள் அந்த தொகையை திருப்பி செலுத்தவில்லை என்றும், புகார்தாரர் பலமுறை கேட்ட பின்பு எதிரி அவரது ஜெயங்கொண்டம் கிளை இந்தியன் வங்கி கணக்கின் ரூ.33,000/– க்கான 02.04.2013 தேதியிட்ட 667091 என்ற எண் கொண்ட காசோலையும் அதே வங்கி கணக்கின் 06.04.2013 தேதியிட்ட ரூ.33,000/–க்கான 667094 எண் கொண்ட காசோலையும், அதே வங்கி கணக்கு எண்.667095 எண் கொண்ட ரூ.35,000/– க்கான காசோலைகள் கொடுத்துள்ளார் என்றும், அந்த 3 காசோலைகளையும் இந்த புகார்தாரர் 16.04.2013 தேதியிட்ட தனது காட்டுமன்னார்கோயில் கிளை இந்தியன் வங்கியில் வசூலுக்காக தாக்கல் செய்துள்ளார் என்றும், ஆனால் அந்த 3 காசோலைகளும் எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்று திருப்பப்பட்டது என்றும், இந்த விபரங்கள் காட்டுமன்னார்கோயில் வங்கி கிளையின் 14.05.2013 தேதியிட்ட 3 திருப்புதல் குறிப்பாணை மூலம் புகார்தாரருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்றும், அதன்படி இந்த புகார்தாரர் தனது வழக்கறிஞர் மூலம் 28.05.2013 தேதியில் எதிரிக்கு சட்ட அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றும், அந்த அறிவிப்பினை 31.05.2013 அன்று பெற்றுக் கொண்ட எதிரி அந்த அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு கொடுக்காமலும், காசோலை தொகையினை திருப்பி செலுத்தாமலும் இருந்துள்ளார் என்றும், அதன்படி எதிரி மாற்றுமுறை

ஆவணச் சட்டம் 1881, பிரிவு 138ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார் என்றும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த புகார் மனுவானது மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138ல் வழக்கினை கோப்பிற்கு எடுக்க தேவையான நிபந்தனைகளை பூர்த்தி செய்வதாலும், இந்த வழக்கிற்கான வழக்குமூலம் இருப்பதாலும், இந்த வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்த எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானதும், வழக்கு நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டு, குவிமுச பிரிவு 251–ன் படி குற்றச்சாட்டின் சாராம்சம் குறித்து வினவிய போது, எதிரி இந்த வழக்கு பொய் வழக்கு எனவும், தான் குற்றவாளி இல்லை என தெரிவித்தார். எனவே புகார்தாரர் தரப்பு சாட்சியத்திற்கு உத்திரவிடப்பட்டு, புகார்தாரர் தரப்பில் பு.சா.1 முதல் பு.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, பு.சா.1 மூலம் 02.04.2013 தேதியிட்ட காசோலை எண்.667091 எதிரியால் புகார்தாரர் பெயருக்கு ரூ.33,000/–க்கு வழங்கப்பட்ட காசோலை அசல் பு.சா.ஆ.1 ஆகவும், 06.04.2013 தேதியிட்ட காசோலை எண்.667094 எதிரியால் புகார்தாரர் பெயருக்கு ரூ.33,000/–க்கு வழங்கப்பட்ட காசோலை அசல் பு.சா.ஆ.2 ஆகவும், 10.04.2013 தேதியிட்ட காசோலை எண்.667095 எதிரியால் புகார்தாரர் பெயருக்கு ரூ.35,000/–க்கு வழங்கப்பட்ட காசோலை அசல் பு.சா.ஆ.3 ஆகவும், 16.04.2013 தேதியிட்ட புகார்தாரர் காட்டுமன்னார்கோயில் இந்தியன் வங்கியில் மேற்படி 3

காசோலைகளையும் தொகையாக மாற்றுவதற்கு தாக்கல் செய்த சலான் – 1 அசல் பு.சா.ஆ.4 ஆகவும், 14.05.2013 தேதியிட்ட இந்தியன் வங்கி காட்டுமன்னார்கோயில் புகார்தாரருக்கு மேற்படி 3 காசோலைகளும் திருப்பப்பட்டதை தெரிவித்து கொடுத்துள்ள மெமோ –3 அசல் பு.சா.ஆ.5 ஆகவும், 28.05.2013 தேதியிட்ட புகார்தாரர் வழக்கறிஞர் எதிரிக்கு கொடுத்த அறிவிப்பு அலுவலக நகல் பு.சா.ஆ.6 ஆகவும், 28.05.2013 தேதியிட்ட புகார்தாரர் வழக்கறிஞர் எதிரிக்கு கொடுத்த பதிவு தபால் ரசீது அசல் பு.சா.ஆ.7 ஆகவும், 19.06.2013 தேதியிட்ட புகார்தாரர் வழக்கறிஞர் காட்டுமன்னார்கோயில் அஞ்சலக அதிகாரிக்கு பதிவு தபால் ஒப்புதல் அட்டை கிடைக்காதது பற்றி கொடுத்த மனு அசல் பு.சா.ஆ.8 ஆகவும், 10.07.2013 தேதியிட்ட காட்டுமன்னார்கோயில் அஞ்சலக அதிகாரி பதிவு தபாலை 31.05.2013 தேதியில் எதிரிக்கு சார்பு செய்யப்பட்டது விபரம் குறித்து கொடுத்த மின்னணு விபரம் அசல் பு.சா.ஆ.9 ஆகவும், பு.சா.2 மூலம் 14.05.2013 தேதியிட்ட வங்கியால் கொடுக்கப்பட்ட ரிட்டன் மெமோ பு.சா.ஆ.10 ஆகவும், 14.05.2013 தேதியிட்ட வங்கியால் கொடுக்கப்பட்ட ரிட்டன் மெமோ பு.சா.ஆ.11 ஆகவும், 31.01.2013 முதல் 30.04.2013 வரையுள்ள வங்கி கணக்கு பற்றிய விவரம் பு.சா.ஆ.12 ஆகவும், பு.சா.3 மூலம் காசோலைகள் தாக்கல் செய்த காலக்கட்டத்திற்கான சிவசுப்பிரமணியன் என்பவரின் வங்கி கணக்கு ஸ்டேட்மெண்ட் பு.சா.ஆ.13 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**3.** மேற்படி சாட்சிகள் சாட்சியங்களுடன் புகார்தாரர் தரப்பு சாட்சியம்

முடிக்கப்பட்டுள்ள நிலையில் கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)–ன் கீழான விசாரணைக்கு எதிரிக்கு பல வாய்ப்பு அளித்தும் ஆஜராகாத காரணத்தினாலும் எதிரியானவர் அவரது வழக்கறிஞர் மூலம் ஆஜராகி புகார்தாரர் தரப்பு சாட்சிகளை முழுமையாக குறுக்கு விசாரணை செய்த நிலையிலும் கு.வி.மு.ச.பிரிவு 313(1)ற்கான விலக்கு வாசகத்தின் படி கு.வி.மு.ச. பிரிவு 313 (1) (ஆ)–ன் கீழான விசாரணை விலக்கிக் கொள்ளப்பட்டது. மேலும் எதிரி தரப்பில் சாட்சியம் அளிக்க முன்வரவில்லை. எனவே எதிரி தரப்பு சாட்சியமும் முடிக்கப்பட்டது.

**4. இந்த வழக்கில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் எதிரி மீதான மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138 ன் கீழான குற்றம் புகார்தாரர் தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.**

**5.** புகார்தாரரின் வழக்கானது TVS கம்பெனியின் ஏஜெண்டாக 2006 முதல் show room வைத்து TVS கம்பெனியின் வாகனங்கள் மற்றும் உதிரி பாகங்களை விற்பனை செய்து வந்தார் என்பதும், பின்னிட்டு 2012 ஜுன், ஜுலை காலத்தில் வியாபாரம் திருப்திகரமாக இல்லாததால் அதனை நிறுத்திக் கொள்வதற்கு முடிவு செய்துள்ளார் என்பதும், அந்த சமயம் மேற்படி நிறுவனத்தில் உதிரி பாகங்கள் விற்பனை ஆகாமல்

இருந்ததால் அதனை எதிரியானவர் ஜெயங்கொண்டத்தில் உதிரி பாக விற்பனை மற்றும் இருசக்கர வேலை தொழிலில் ஈடுபட்டதால் அவர் புகார்தாரர் வசம் உள்ள உதிரி பாகங்களை கடனுக்கு வாங்க முன் வந்துள்ளார் என்பதும், புகார்தாரர் வேறு விதத்தில் விற்பனை செய்ய முடியாத காரணத்தினால் 05.05.2012 தேதியில் ரூ.1,01,000/- மதிப்புள்ள உதிரி பாகங்களை கடனாக கொடுத்தார் என்பதும், அதனை ஒரு மாத காலத்திற்குள் செலுத்திவிடுவதாக கூறி எதிரி பொருட்களை பெற்றுக் கொண்டார் என்பதும், ஆனால் அவ்வாறு தொகை திருப்பி கொடுக்காமல் பலமுறை கேட்ட பின்னிட்டு எதிரி இந்த வழக்கு காசோலையை கொடுத்தார் என்பதும், அதனை பணமாக்கும் பொருட்டு புகார்தாரர் 16.04.2013 தேதியிட்ட தனது காட்டுமன்னார்கோயில் கிளை இந்தியன் வங்கி கணக்கில் வசூலுக்காக தாக்கல் செய்தபோது எதிரி கணக்கில் தொகை இல்லை என திருப்பப்பட்டுள்ளது என்பதும், அது தொடர்பாக புகார்தாரர் 28.05.2013 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு எதிரிக்கு கொடுத்துள்ளார் என்பதும், அதனை 31.05.2013 அன்று பெற்றுக் கொண்ட எதிரி காசோலை தொகை செலுத்தாமலும், அறிவிப்பிற்கு பதில் அளிக்காமலும் இருந்துள்ளார் என்பதும் ஆகும்.

**6.** புகார்தாரர் தனது மேற்படி வழக்கை அனுசரித்து பு.சா.1 ஆக வாய்மொழி சாட்சியம் அளித்துள்ளார். மேலும் எதிரி தனக்கு திருப்பி செலுத்த வேண்டிய தொகையை செலுத்தும் பொருட்டு கொடுத்ததாக 3

காசோலைகளை பு.சா.ஆ.1 முதல் பு.சா.ஆ.3 வரையிலான ஆவணங்களாக தாக்கல் செய்துள்ளார். மேலும் மேற்படி காசோலைகளை எதிரியின் அறிவுறுத்தலின்படி வங்கியில் வசூலுக்காக செலுத்தியதாக இரசீதை பு.சா.ஆ.4 ஆவணமாக தாக்கல் செய்துள்ளார். மேலும் அவ்வாறு செலுத்தப்பட்ட காசோலைகளை பணமாக்காமல் திருப்பப்பட்டதாக பு.சா.ஆ.5 திருப்புதல் குறிப்பாணைகளை தாக்கல் செய்துள்ளார். அவ்வாறு மேற்படி காசோலைகளை திருப்பப்பட்டதை தொடர்ந்து புகார்தாரர் எதிரிக்கு அனுப்பிய அறிவிப்பு பு.சா.ஆ.6 ஆவணமாகவும், அதனை அனுப்பியதற்காக இரசீது பு.சா.ஆ.7 ஆகவும் தாக்கல் செய்துள்ளார். மேற்படி அறிவிப்பை எதிரி பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் அட்டை கிடைக்காதது தொடர்பாக புகார்தாரர் அவரது வங்கியில் அளித்த புகார் மனுவை பு.சா.ஆ.8 ஆவணமாகவும், மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பு எதிரிக்கு சார்வு செய்யப்பட்டதற்கான மின்னணு ஆவணம் பு.சா.ஆ.9 ஆகவும் தாக்கல் செய்துள்ளார்.

**7.** மேலும் புகார்தாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட பு.சா.2 சாட்சியான எதிரி கணக்கு வைத்துள்ள இந்தியன் வங்கியின் கிளை மேலாளர் விசாரிக்கப்பட்டு, அவர் எதிரியின் காசோலையை பணமாக்கும் பொருட்டு தனது வங்கிக்கு வரப்பெற்றபோது அந்த காசோலைகள் நிர்ணயித்த தொகைக்கு அதிகமாக இருந்ததால் மறுக்கப்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அவரது வங்கி வழங்கிய திருப்புதல்

குறிப்பாணைகளும் பு.சா.ஆ.10, பு.சா.ஆ.11 ஆக தாக்கல் செய்துள்ளார். மேலும் எதிரியின் வங்கி கணக்கின் 31.01.2013 முதல் 30.04.2013 வரையுள்ள வங்கி கணக்கு அறிக்கை பு.சா.ஆ.12 ஆவணமாக தாக்கல் செய்துள்ளார். பு.சா.3 சாட்சியாக விசாரிக்கப்பட்ட புகார்தாரர் கணக்கு வைத்துள்ள இந்தியன் வங்கி கிளையின் உதவி மேலாளர் அவரது சாட்சியத்தில் புகார்தாரர் செலுத்திய இந்த வழக்கின் காசோலைகள் அனுமதிக்கப்பட்ட வரையறைக்கு அதிக தொகைக்கு எழுதப்படாததால் திருப்பப்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் இந்தகாசோலை தாக்கல் செய்யப்பட்டுள்ள காலக்கட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட புகார்தாரரின் வங்கி கணக்கு அறிக்கையை பு.சா.ஆ.13 ஆவணமாக தாக்கல் செய்துள்ளார். மேற்படி சாட்சிகளின் சாட்சியத்துடன் புகார்தாரர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**8.** மேற்படி சாட்சியம் மற்றும் சான்றவாணங்கள் புகார்தாரர் தரப்பு வழக்கை முதல் தோற்றத்தில் நிரூபிக்கும் விதமாக உள்ளது. மேலும் எதிரியானவர் பு.சா.ஆ.1 முதல் பு.சா.ஆ.3 வரையிலான காசோலைகளை தன்னுடையது அல்ல என்றோ, அதிலுள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என்றோ மறுக்கவில்லை. எனவே புகார்தாரருக்கு ஆதரவாக மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 118, 139–ன் கீழான அனுமானங்கள் ஏற்படுகிறது. அதனை மறுதலிக்கும் சுமை எதிரியையே சாரும். அவ்வாறு எதிரி புகார்தாரருக்கு ஆதரவாக ஏற்பட்டுள்ள அனுமானங்களை

மறுதலித்துள்ளாரா என பரிசீலிக்கும்போது, இந்த வழக்கில் எதிரி தரப்பு எதிர்வாதமானது அவர் இந்த வழக்கின் சட்டபடியான வழக்கறிஞர் அறிவிப்பை தான் பெற்றுக் கொள்ளவில்லை என்பதும், காசோலை திருப்பப்பட்டதற்கான சரியான காரணமானது நிர்ணயிக்கப்பட்ட தொகையை விட அதிகமான தொகைக்கு காசோலை எழுதப்பட்டதே காரணம் என்றும், புகார்தாரர் இந்த புகார் மனுவில் காசோலை திருப்பப்பட்டதற்கான சரியான காரணத்தை கூறாமல் எதிரியின் கணக்கில் போதிய பணம் இல்லை என திருப்பப்பட்டதாக கூறியுள்ளார் என்பதும், எதிரி இந்த வழக்கு காசோலைகளை ஸ்ரீ பரமேஸ்வரி ஆட்டோ ஸ்பேர்ஸ் மற்றும் டுவீலர் ஒர்க் கடையின் சார்பாக கொடுத்துள்ள நிலையில் மேற்படி கடையை எதிரியாக சேர்க்காமல் தன்னை மட்டும் எதிரியாக சேர்த்துள்ளதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்பதும் எதிரி தான் வாங்கிய உதிரி பாகங்களுக்கான தொகை திருப்பி செலுத்தி வந்தார் என்பதும், அந்த சமயத்தில் எதிரி கொடுத்த காசோலையை தவறாக பயன்படுத்தி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதும் ஆகும்.

**9.** இந்த வழக்கின் சட்டப்படியான வழக்கறிஞர் அறிவிப்பு எதிரிக்கு சார்வு செய்யப்பட்டது தொடர்பான எதிர்வாதம் தொடர்பாக பரிசீலனை செய்யும்போது, இந்த புகார்தாரர் எதிரிக்கு எதிரியின் பெயரை மலர்மன்னன் என்று குறிப்பிட்டு அவரது கடையின் முகவரி குறிப்பிட்டு அறிவிப்பு அனுப்பியுள்ளார் என பு.சா.ஆ.6 அறிவிப்பிலிருந்து அறிய முடிகிறது. எதிரி

தனது பெயர் மலர்மன்னன் அல்ல என்றும் மாமன்னன் என்றும் தெரிவித்துள்ளார். புகார்தாரரும் அதனை ஒப்புக் கொண்டு முதலில் இந்த வழக்கில் எதிரியின் பெயர் மலர்மன்னன் என்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் பின்னிட்டு மாமன்னன் என திருத்தம் செய்துள்ளார். இந்த வழக்கில் பு.சா.ஆ.1 முதல் பு.சா.ஆ.3 வரையிலான காசோலைகளை பரிசீலிக்கும்போது, இந்த எதிரியின் பெயரானது மாமன்னன் என அறிய முடிகிறது. அதனை குறிப்பிட்டு எதிரி தரப்பில் இந்த வழக்கில் சட்ட அறிவிப்பு எதிரிக்கு முறையாக வழங்கப்படவில்லை என வாதிட்டார். எனவே இந்த அறிவிப்பு எதிரிக்கு முறையாக சார்வு செய்யப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். எதிரியானவர் பு.சா.ஆ.6 அறிவிப்பில் கண்டுள்ள தனது பெயரை மறுத்துள்ள போதும் அதில் உள்ள முகவரி தன்னுடையது அல்ல என்பதை மறுக்கவில்லை. மேலும் மேற்படி அறிவிப்பை அனுப்பிய தபால் சார்வு செய்யப்பட்டது தொடர்பாக அறிக்கையான பு.சா.ஆ.9 ஆவணத்தை பரிசீலிக்கும் போது புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய தபால் எந்த காரணத்திற்காகவும் திருப்பப்படவில்லை எனவும் அது சார்வு செய்யப்பட்டது எனவும் அறிய முடிகிறது.

**10.** இந்நிலையில் புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு எதிரிக்கு முறையாக சார்வு செய்யப்பட்டதாகவே கருத இயலும். அது தொடர்பாக மாண்புமிகு உச்ச நீதிமன்றம் *C.C Alavi Haji Vs. Palapetty*

*Muhammed And Another* Reported in 2007 **INSC** 628 என்ற வழக்கில் பின்வருமாறு தீர்ப்பளித்துள்ளது.

> "As noticed above, the entire purpose of requiring a notice is to give an opportunity to the drawer to pay the cheque amount within 15 days of service of notice and thereby free himself from the penal consequences of Section 138. In Vinod Shivappa (2006) 6 SCC 456 this Court observed:
>
> "One can also conceive of cases where a well – intentioned drawer may have inadvertently missed to make necessary arrangements for reasons beyond his control, even though he genuinely intended to honour the cheque drawn by him. The law treats such lapses induced by inadvertence or negligence to be pardonable, provided the drawer after notice makes amends and pays the amount within the prescribed period. It is for this reason that Clause (c) of proviso to Section 138 provides that the section shall not apply unless the drawer of the cheque fails to make the payment within 15 days of the receipt of the said notice. To repeat, the proviso is meant to protect honest drawers whose cheques may have been dishonoured for the fault of others, or who may have genuinely wanted to fulfil their promise but on account of inadvertence or negligence failed to make necessary arrangements for the payment of the cheque. The proviso is not meant to protect unscrupulous drawers who never intended to honour the cheques issued by them, it being a part of their modus operandi to cheat unsuspecting persons."

> It is also to be borne in mind that the requirement of giving of notice is a clear departure from the rule of criminal law, where there is not stipulation of giving of a notice before filing a complaint. Any drawer who claims that he did not receive the notice sent by post, can, within 15 days of receipt of summons from the court in respect of the complaint under section 138 of the Act, make payment of the cheque amount and submit to the court that he had made payment within 15 days of receipt of summons (by receiving a copy of complaint with the summons) and, therefore, the complaint is liable to be rejected. A person who dies not pay within 15 days of receipt of the summons from the court along with the copy of the complaint under Section 138 of the Act, cannot obviously contend that there was no proper service of notice as required under Section 138, by ignoring statutory presumption to the contrary under Section 27 of the GC Act and Section 114 of the Evidence Act. In our view, any other interpretation of the proviso would defeat the very object of the legislation. As observed in Bhaskaran case (1999) 7 SCC 510 if the "giving of notice" in the context of Clause (b) of the proviso was the same as the "receipt of notice" a trickster cheque drawer would get the premium to avoid receiving the notice by adopting different strategies and escape from legal consequences of Section 138 of the Act."

மேற்படி தீர்ப்பின் அடிப்படையில் பரிசீலிக்கும்போது இந்த வழக்கின் வழக்கறிஞர் அறிவிப்பு எதிரியின் முவரியை சரியாக குறிப்பிட்டு அனுப்பியுள்ள நிலையிலும் அது சார்வாகாமல் புகார்தாரருக்கு திருப்பப்பட்டதாக எந்த ஒரு ஆதாரமும் முன்னிடப்படாத நிலையிலும்

பு.சா.ஆ.9 ஆவணத்தை பரிசீலனையில் புகார்தாரர் அனுப்பிய பு.சா.ஆ.6 அறிவிப்பை எதிரி சார்வானதாவே கருத இயலும்.

**11.** அடுத்ததாக புகார்தாரர் தாக்கல் செய்துள்ள வழக்கு காசோலைகள் exceed arrangement என்ற காரணத்துடன் திருப்பப்பட்ட நிலையில் எதிரி கணக்கில் போதிய பணம் இல்லை என புகார்தாரர் தெரிவித்துள்ளார் என்ற எதிரியின் எதிர்வாதத்தை பரிசீலிக்கும்போது இந்த வழக்கு காசோலைகளை வசூலுக்காக தாக்கல் செய்யப்பட்டபோது அது பணமாக்கப்படாமல் மதிப்பிழக்கப்பட்டுள்ளது என்ற பொருண்மை தெரிவித்து வழக்கறிஞர் அறிவிப்பு வழங்கியுள்ள நிலையில் அவ்வாறு மதிப்பிழக்கப்பட்டதற்கான காரணம் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது வழக்கை பாதிக்கக் கூடியது ஆகாது. எனவே இந்த எதிர்வாதத்திலும் எந்த ஒரு தகுதியும் காணப்படவில்லை.

**12.** அடுத்ததாக புகார்தாரர் இந்த வழக்கின் காசோலைகளை ஸ்ரீ பரமேஸ்வரி ஆட்டோ ஸ்பேர்ஸ் மற்றும் டுவீலர் ஒர்க் என்ற proprietary concern சார்பாக கொடுத்ததாக கூறும் நிலையில் மேற்படி proprietary concern ஐ வழக்கில் எதிரியாக சேர்க்காமல் proprietor ஆன தன்னை மட்டும் வழக்கில் சேர்த்துள்ளது மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 141 க்கும் முரணானது என தெரிவித்து மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின்

*neeta Hada Vs M/S Godfather Travels & Tours Pvt. Ltd* Reported in **AIR** 2012 **Supreme Court** 2795 மற்றும் *S.M.S. Pharmaceuticals Ltd Vs Neeta Bhalla And Another* Reported in **AIR** 2005 **Supreme Court** 3512 ஆகிய முன்தீர்ப்புகளை சார்வு செய்தார். எனினும், புகார்தாரர் நடத்தும் proprietary concern ஆனது மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 141ல் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனம் என்ற வரையறைக்குள் அடங்காது. இது தொடர்பாக மாண்புமிகு உச்சநீதிமன்றம் *Raghu Lakshminarayanan Vs Fine Tubes* Reported in 2007 **INSC** 379 என்ற வழக்கில் பின்வருமாறு தீர்ப்பளித்துள்ளது.

> "The description of the accused in the complaint petition is absolutely vague. A juristic person can be a company within the meaning of the provisions of the companies Act, 1956 or a partnership within the meaning of the provisions of the Partnership Act, 1932 or an association of persons which ordinarily would mean a body of persons which is not incorporated under any statute. A proprietary concern, however, stands absolutely on a different footing. A person may carry on business in the name of a business concern, but he being proprietor thereof, would be solely responsible for conduct of its affairs. A proprietary concern is not a company. Company in terms of the Explanation appended to Section 141 of the Negotiable Instruments Act, means any body corporate and includes a firm or other association of individuals. Director has been defied to mean in relation to a firm, a partner in the firm. Thus, whereas in relation to a company, incorporated and registered under the

> companies Act, 1956 or any other statute, a person as a Director must come within the purview of the said description, so far as a firm is concerned, the same would carry the same meaning as contained in the Partnership Act."

மேற்படி தீர்ப்பின் பரிசீலனையில், எதிரி தரப்பில் இந்த எதிர்வாதத்திலும் முகாந்திரம் காணப்படவில்லை.

**13.** அடுத்ததாக புகார்தாரர் தான் பெற்றுக் கொண்ட உதிரி பாகங்களுக்கு செலுத்த வேண்டிய தொகை செலுத்திவிட்டதாக கூறப்பட்டுள்ள எதிர்வாதத்தை பரிசீலிக்கும்போது, மேற்படி பொருண்மையை நிரூபிக்கும் சுமை எதிரியையே சேரும். புகார்தாரர் எதிரிக்கு உதிரி பாகங்கள் வழங்கியுள்ளதாகவும், எதிரி அதற்குரிய தொகையை செலுத்த வேண்டும் என்றும் அவரது சாட்சி மற்றும் சான்றாவணம் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ள நிலையிலும் எதிரியும் தான் உதிரி பாகங்கள் பெற்றுக் கொண்டதாக ஒப்புக் கொண்டுள்ள நிலையிலும், எதிரி பணத்தை திருப்பி செலுத்தியதாக புகார்தாரர் சாட்சிகளை குறுக்குவிசாரணையில் நிரூபிக்கவில்லை. மேலும் தனது தரப்பில் தனிப்பட்ட சாட்சியம் அளித்தும் அத்தகைய பொருண்மைகள் நிரூபிக்கவில்லை. எனவே எதிரி தரப்பு மேற்படி எதிர்வாதம் ஏற்கக் கூடியதாக இல்லை.

**14.** எனவே புகார்தாரர் அவரது வழக்கை நிரூபித்து சாட்சியம் மற்றும்

சான்றாவணங்கள் வழங்கியுள்ள நிலையிலும், கூடுதலாக அவருக்கு ஆதரவாக மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 178, 139 –ன் கீழான அனுமானங்கள் ஏற்பட்டுள்ள நிலையிலும், புகார்தாரர் தரப்பு சாட்சியத்தை பொய்ப்பிக்கும் விதமாகவோ, புகார்தாரரின் வழக்கிற்கு ஆதரவாக ஏற்பட்டுள்ள அனுமானங்களை மறுதலிக்கும் விதமாகவோ எந்த ஒரு சாட்சியமும் வழங்கவில்லை. எனவே எதிரி மீதான மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138 ன் கீழான குற்றச்சாட்டு புகார்தாரர் தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என இந்நீதிமன்ற முடிவு செய்கிறது.

**15.** மேற்படி தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகளில் எதிரி மீதான குற்றம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டு எதிரி குற்றவாளி என்று தீர்வு காணப்பட்டுள்ளதால் எதிரிக்கு வழங்க வேண்டிய தண்டனை குறித்து காணும்போது இந்த வழக்கின் பொருண்மைகள் எதிரியின் நிலை நடத்தை ஆகியவற்றை கருத்தில் கொண்டு எதிரிக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும் பாதிக்கப்பட்ட இவ்வழக்கின் புகார்தாரருக்கு இழப்பீடாக காசோலை தொகையான ரூ.1,01,000/–ஐ வழங்க உத்தரவிட வேண்டியது அவசியம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**16. முடிவாக**

(i) எதிரி மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138 ன் கீழ் குற்றவாளி என்று தீர்மானிக்கப்பட்டதன் படி எதிரி புகார்தாரருக்கு ரூ.1,01,000/—ஐ (ரூபாய் ஒரு இலட்சத்து ஆயிரம் மட்டும்) இழப்பீடு தொகையாக இன்றைய (30.06.2026) தேதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் குவிமுச பிரிவு 357 ன் கீழ் புகார்தரருக்கு இழப்பீடாக செலுத்த வேண்டும் என்றும், மேலும் எதிரிக்கு ஒரு ஆண்டு மெய்க்காவல் சிறைதண்டனை விதித்தும் கு.வி.மு.ச. பிரிவு 255(2)ன் கீழ் தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.

(ii) மேற்படி இழப்பீடு தொகையை கு.வி.மு.ச.357 ன் கீழ் இன்றைய (30.06.2026) தேதியில் இருந்து 1 மாத காலத்திற்குள் செலுத்த தவறும் பட்சத்தில் எதிரிக்கு கூடுதலாக 3 மாதங்கள் மெய்க்காவல் சிறைதண்டனை விதித்தும் உத்தரவிடப்படுகிறது. மேலும், எதிரி தரப்பில் இவ்வழக்கில் ஏற்கனவே வழக்கு சம்பந்தமாக வைப்பீடு ஏதும் செய்திருந்தால் அதனை மேற்படி இழப்பீடு தொகையில் கழித்துக் கொள்ளவும் உத்தரவிடப்படுகிறது.

(iii) இவ்வழக்கில் தடய பொருள்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே அது குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

(iv) எதிரி ஏற்கனவே இவ்வழக்கில் சிறையில் இருந்திருந்தால் சிறையில் இருந்த காலத்தை கு.வி.மு.ச.பிரிவு 428ன் கீழ் கழித்துக் கொள்ளவும் உத்தரவிடப்படுகிறது.

எதிரி ஏற்கனவே இந்த நீதிமன்றத்திற்கு வழங்கியிருந்த பிணைமுறி பத்திரத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

என்னால் இத்தீர்ப்புரை தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு பின்னர் அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026–ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ம் நாள் என்னால் இந்நீதிமன்றம் அவையறிய பகரப்பட்டது.

SAM EUGINE JEBAKUMAR

Digitally signed by SAM EUGINE JEBAKUMAR
Date: 2026.06.30 22:56:20 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்**
**நீதித்துறை நடுவர், காட்டுமன்னார்கோயில்**

**<u>புகார்தாரர் தரப்பு சாட்சிகள்</u>**

| சாட்சியின் குறியீடு | சாட்சியின் பெயர் | சாட்சியத்தின் தன்மை |
|---|---|---|
| பு.சா. 1 | சிவசுப்பிரமணியன் | புகார்தாரர். |
| பு.சா. 2 | ஸ்ரீராமன் | பு.சா.1க்கு அனுசரனையான சாட்சி. |

| | | |
|---|---|---|
| பு.சா. 3 | பிரகாஷ் | பு.சா.1க்கு அனுசரனையான சாட்சி. |

**<u>புகார்தாரர் தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| சான்றாவணத்தின் குறியீடு | சான்றாவண விபரம் | சான்றாவணத்தை நிரூபித்தவர் /சான்றளித்தவர் |
|---|---|---|
| பு.சா.ஆ.1 | 02.04.2013 தேதியிட்ட காசோலை எண்.667091 எதிரியால் புகார்தாரர் பெயருக்கு ரூ.33,000/-க்கு வழங்கப்பட்ட காசோலை அசல். | பு.சா.1 |
| பு.சா.ஆ.2 | 06.04.2013 தேதியிட்ட காசோலை எண்.667094 எதிரியால் புகார்தாரர் பெயருக்கு ரூ.33,000/-க்கு வழங்கப்பட்ட காசோலை அசல். | பு.சா.1 |
| பு.சா.ஆ.3 | 10.04.2013 தேதியிட்ட காசோலை எண்.667095 எதிரியால் புகார்தாரர் பெயருக்கு ரூ.35,000/-க்கு வழங்கப்பட்ட காசோலை அசல். | பு.சா.1 |

| | | |
|---|---|---|
| பு.சா.ஆ.4 | 16.04.2013 தேதியிட்ட புகார்தாரர் காட்டுமன்னார்கோயில் இந்தியன் வங்கியில் மேற்படி 3 காசோலைகளையும் தொகையாக மாற்றுவதற்கு தாக்கல் செய்த சலான் – 1 அசல். | பு.சா.1 |
| பு.சா.ஆ.5 | 14.05.2013 தேதியிட்ட இந்தியன் வங்கி காட்டுமன்னார்கோயில் புகார்தாரருக்கு மேற்படி 3 காசோலைகளும் திருப்பப்பட்டதை தெரிவித்து கொடுத்துள்ள மெமோ –3 அசல். | பு.சா.1 |
| பு.சா.ஆ.6 | 28.05.2013 தேதியிட்ட புகார்தாரர் வழக்கறிஞர் எதிரிக்கு கொடுத்த அறிவிப்பு அலுவலக நகல். | பு.சா.1 |
| பு.சா.ஆ.7 | 28.05.2013 தேதியிட்ட புகார்தாரர் வழக்கறிஞர் எதிரிக்கு கொடுத்த பதிவு தபால் ரசீது அசல். | பு.சா.1 |
| பு.சா.ஆ.8 | 19.06.2013 தேதியிட்ட புகார்தாரர் வழக்கறிஞர் காட்டுமன்னார்கோயில் அஞ்சலக அதிகாரிக்கு பதிவு தபால் | பு.சா.1 |

| | | |
|---|---|---|
| | ஒப்புதல் அட்டை கிடைக்காதது பற்றி கொடுத்த மனு அசல். | |
| பு.சா.ஆ.9 | 10.07.2013 தேதியிட்ட காட்டுமன்னார்கோயில் அஞ்சலக அதிகாரி பதிவு தபாலை 31.05.2013 தேதியில் எதிரிக்கு சார்பு செய்யப்பட்டது விபரம் குறித்து கொடுத்த மின்ணனு விபரம் அசல். | பு.சா.1 |
| பு.சா.ஆ.10 | 14.05.2013 தேதியிட்ட வங்கியால் கொடுக்கப்பட்ட ரிட்டன் மெமோ. | பு.சா.1 |
| பு.சா.ஆ.11 | 14.05.2013 தேதியிட்ட வங்கியால் கொடுக்கப்பட்ட ரிட்டன் மெமோ. | பு.சா.1 |
| பு.சா.ஆ.12 | 31.01.2013 முதல் 30.04.2013 வரையுள்ள வங்கி கணக்கு பற்றிய விவரம். | பு.சா.1 |
| பு.சா.ஆ.13 | பு.சா.1ன் வங்கி கணக்கு ஸ்டேட்மெண்ட். | பு.சா.1 |

**புகார்தாரர் தரப்பு சான்று பொருள்:** இல்லை

**<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருள்:</u>**

இல்லை

<u>குறிப்பு:</u>

1. எந்த ஒரு சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைத்து விசாரிக்கப்படவில்லை.
2. வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்து வந்தார்.
3. எதிரி ஆஜரில்லாததால் தீர்ப்பு நகல் எதிரிக்கு வழங்கப்படவில்லை.

SAM EUGINE JEBAKUMAR    Digitally signed by SAM EUGINE JEBAKUMAR Date: 2026.06.30 22:56:33 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்**
**நீதித்துறை நடுவர், காட்டுமன்னார்கோயில்**